விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 249 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 09 திங்கட்கிழமை (25.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அரியாலையில் காணாமல்போன சகலரையும் 7ஆம் இராணுவ படையே கைது செய்தது



### "சம்பத்" எனும் சோமரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். அரியாலையில் 'சம்பத்' எனும் பெயரில் குறிப்பிடத் தக்களவு காலம் பணியாற்றியவன் என்ற ரீதியில், 1996 ஆம் ஆண்டில் அரியாலைப் பிரதேசத்தில் காணாமல்போன சகல நபர்களும் 7ஆவது இராணுவக் காலாட் படை தலைமையகத்தின் உயரதிகாரிகளினாலேயே கைதுசெய்யப்பட்டனர் என்பதை நானறி வேன். அவ்வதிகாரிகள் யார் என்பதையும், 1996 இல் யாழ்ப்பாணத் தில் இடம்பெற்ற சகல குற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவேன் என கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்ற வாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ கூறியுள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவுக்கு வந்தது
## தபால் தொழிற்சங்க பணிப் புறக்கணிப்பு

(கொழும்பு)

தபால் தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்பானது நேற்று 02ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நாவில் புதிய தீர்மானம் ;அதே பழைய சித்தாந்தத்தில் இலங்கை

05ஆம் பக்கம் பார்க்க

## ரணிலின் கைதை எதிர்க்கும் தலைவர்கள்

07ஆம் பக்கம் பார்க்க

## தெல்லியூர் துர்க்கைக்கு இன்று கொடியேற்றம்



(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று (25) திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது. 02ஆம் பக்கம் பார்க்க

### நீதிமன்ற உத்தரவை எதிர்ப்பது நீதிமன்ற அவமதிப்பாகும்

# ரணிலுக்காக ஒன்றிணைவோரில் அநேகர் தண்டனைக்குரியவர்கள்

### ரில்வின் சில்வா அதிரடி

(கொழும்பு)



முன்னாள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக கைகோர்த்துள்ள எதிர்க்கட்சிகள்தான் கடந்த காலங் களில் 'ரணிலை சிறைக்கு அனுப்பினால்தான் உறக்கம் வரும்' என்றார்கள். நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமை வாகவே ரணில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நீதிமன்றத்தின் உத்தரவை சவாலுக்குட்படுத்தி போராட் டத்தில் ஈடுபட்டால் அது நீதிமன்ற அவமதிப்பாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செய லாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெரோயினுடன் நேற்று சுன்னாகத்தில் ஒருவர் கைது

(சுன்னாகம்)

நேற்றிரவு சுன்னாகம் பகுதியில் ஹெரோயினு டன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

குறித்த நபர் 2 கிராம் ஹெரோயினை தனது காரில் வைத்திருந்தவேளை கைது செய்யப்பட் டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந் 16ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுகள் இன்று மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகளுக்கு சான்றாதாரமாக உருவெடுத்துள்ள செம்மணி மனிதப் புதைகுழி அகழ் வின் 2ஆம் சுற்றின் மூன்றாம் கட்டம் இன்று (25) மீள ஆரம்பமாகவுள்ளது.

கடந்த 06ஆம் திகதி வரையில் கட்டம் கட்டமாக 41 நாட்கள் முன்னெ டுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது, 133 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற் றாக அகழ்ந்து 02ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.நூலக எரிப்பு, கறுப்பு ஜூலை, பட்டலந்த படுகொலை

## உள்ளிட்ட முக்கிய சம்பவங்களுடன் தொடர்புடைய ரணிலே கைதானார்

### யாழில் அமைச்சர் பிமல் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க யாழ்ப்பாண நூலக எரிப்பு மற்றும் கறுப்பு ஜூலைக் கலவரம், பட்டலந்த படுகொலைகள் உள்ளிட்ட பல சம்பவங் 02ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றில் நாளை ஆஜராக முடியாத நிலையில் ரணில்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாளை (26) நீதிமன்றத்தில் ஆஜராக முடியாதிருப்பதாகக் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரதிப் பணிப் பாளர் மருத்துவர் ருஷான் பெலனா தெரிவித்துள்ளார்.

அரசநிதிக்குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள முன் னாள் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவை நாளை செவ் 04ஆம் பக்கம் பார்க்க

## ரணிலுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத் தியசாலையில் தீவிர சிகிச் சைப் பிரிவில் அனுமதிக்கப் 04ஆம் பக்கம் பார்க்க

## இன்று ரணில்; நாளை...?
## அலறி அடிக்கும் எதிர்க்கட்சிகள்



04ஆம் பக்கம் பார்க்க

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

எடுக்கப்பட்டுள்ளதுடன், 147 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

அத்துடன் கடந்த 14ஆம் திகதி யாழ்.நீதவான் நீதிமன்றில் இடம் பெற்ற செம்மணி புதைகுழி வழக்கு விசாரணைகளின்போது, தற்போது அகழ்வு நடைபெறும் பகுதிகளைச் சூழவுள்ள பகுதிகளிலும் புதைகுழிகள் இருக்கலாம் என வலுவான சந்தேகம் உள்ளமையால் மேலும் 08 வார கால பகுதி தேவைப்படுவதாக சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவனால் மன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டதை அடுத்து, அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள மன்று கட்டளையிட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ந-7,33)


## வேலையாள் தேவை

யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் உள்ள எமது நிறுவனத்திற்கு துப்புரவு செய்யும் தொழிலாளி ஆண் / பெண் தேவை.

தொடர்பு (5128)

077 953 0496


## தெல்லியூர்...

தொடர்ந்து பன்னிரு தினங்கள் இடம் பெறவுள்ள மகோற்சவத்தில் செப்ரெம்பர் 04ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## உள்ளிட்ட...

களுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய ஒருவரே என அமைச்சர் விமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

ரணிலுக்கு எதிராக மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவரைப் பாதுகாக்கும் விதத்தில் சுமந்திரன் உள்ளிட்டோர் கருத்து வெளியிடுவது கவலையளிக்கின்றது.

இந்த நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம். பலம் பொருந்தியவர்களுக்கு எதிராக சட்டம் செயற்படாது என்ற நிலை மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க மட்டும் அல்ல, எப்படியான நபரும் சட்டத்துக்குக் கட்டுப்பட்டே செயற்பட வேண்டும் என்றும் இந்த விடயத்தில் எவரும் விதிவிலக்கல்ல என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ந-7)

## தபால்...

டன் நிறைவுக்கு வந்துள்ளது.

அரசாங்கத்துடனான கலந்துரையாடலில் பின்னர் ஏற்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய பணிப்புறக் கணிப்பு நிறைவுக்கு வந்துள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணைப்பாளர் சிந்தக்க பண்டார தெரிவித்துள்ளார்.

19 கோரிக்கைகளை முன்வைத்து தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்கங்கள் உட்பட பல தொழிற் சங்கங்கள் கடந்த 17ஆம் திகதி முதல் குறித்த பணிப் புறக்கணிப்பை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் சசிகலா பவளலிங்கம் [பவி, சசி மிஸ்]

(குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 25.08.2025 திங்கட்கிழமை முற்பகல் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர் வரும் 27.08.2025 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரது பிரிவிற்கு அஞ்சலி செலுத்திய, அனுதாபம் தெரிவித்த, ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைத்து உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மாவிட்டபுரம் வீதி,
கீரிமலை.

இங்ஙனம் :
குடும்பத்தினர்

(5127)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத — திகதி 2025.08.24 — சீட்டிழுப்பு இலக்கம் 5931 — B 7 3 0 7 9 1
அத சம்பத — B 0 7 9 1 — சீட்டிழுப்பு இலக்கம் 0506

சுப தவசக் — திகதி 2025.08.24 — 0947 — இடபம் 12 23 35 41

தன நிதானய — திகதி - 2025.08.24 — சீட்டிழுப்பு இலக்கம் - 1961 — Y 53 57 61 68 Y — Double Chance 36674

மெகா பவர் — திகதி 24/08/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2279 — I 23 01 24 62 76

ஜய — திகதி 2025.08.24 — சீட்டிழுப்பு இலக்கம் 0199 — O 6 8 2 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4173 — சீட்டிழுப்பு திகதி 24.08.2025 — P 20 39 47 69 — P

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.08.24 — சீட்டிழுப்பு இலக்கம் 1240 — தனுசு 04 31 44 60 தனுசு — 15407

சுப்பிரி தன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 24.08.2025 — வெற்றி வாரம் 0639 — R 5 7 8 1 7 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,702,383.20

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2905 — சீட்டிழுப்புத் திகதி 2025.08.24 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 02 44 47 74 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,380,847.20

சனிதா — திகதி 24.08.2025 — வெற்றி வாரம் 5066 — 17 26 36 70 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,663,590.00

சசிறி — வெற்றி வாரம் 0755 — 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை — 14 33 40 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4617 — சீட்டிழுப்பு திகதி 24.08.2025 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 12 22 23 60 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,787,271.60

லக்ன வாசனா — O 12 23 24 45 67 — சீட்டிழுப்பு வாரம் 2081 — 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.589,766,684.60

அத கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2731 — சீட்டிழுப்பு திகதி 2025.08.24 — 02 09 20 75 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.85,355,019.20

DLB DEVELOPMENT LOTTERIES BOARD — NLB National Lotteries Board — www.dlb.lk — www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் ஸ்திரத்தன்மை கேள்விக்குறி

# 2500 மருத்துவர்கள் வெளியேறத்திட்டம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

**(கொழும்பு) ..................................**

**இலங்கையில் நிலவும் பொருளாதார அரசியல் ஸ்திரமின்மை காரணமாக 2 ஆயிரத்து 500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் பிரபாத் சுகதாச எச்சரித்துள்ளார்.**



பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக 2,500இற்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

மருத்துவ நிபுணர்கள் தொடர்ந்து வெளியேறுவது மருத்துவமனைகளை கடுமையான அழுத்தத்திற்குள்ளாக்கும்.

சுகாதார அமைச்சின் "குறுகிய பார்வை மற்றும் திறமையற்ற கொள்கைகள்" நிலைமையை மோசமாக்குகின்றன எனக் குறிப்பிட்ட அவர், பொருளாதார நீதி, நியாயமான சிகிச்சை மற்றும் தொழில்முறை பாதுகாப்பு மூலம் மருத்துவர்களைத் தக்க வைத்துக்கொள்வதற்கான முன்மொழிவுகள் பல முறை முன் வைக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும், அமைச்சு ஒரு நிரந்தர பொறிமுறையை செயற்படுத்தத் தவறிவிட்டது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்க சுகாதார அமைப்பில் இருக்கும் மருத்துவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வமாக பாதுகாக்கப்பட்ட சூழலை உறுதி செய்யுமாறு அரசாங்கத்தை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்துவதாக மருத்துவர் பிரபாத் சுகததாச குறிப்பிட்டார். (க-8)

# தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்ட அனைவருடனும் இணைந்து பணியாற்றத் தயார்

## பிரித்தானிய தமிழர் பேரவை அழைப்பு

**(கொழும்பு) ------------------------**

**தமிழர் தாயகத்தில் அவசர கால அடிப்படையில் மீள் குடியேற்றமும் மீள் நிர்மாணமும் செய்வதற்கான திட்ட முன்மொழிவைச் செய்துள்ள பிரித்தானிய தமிழர் பேரவை ஏனைய தரப்புக்களை இணைந்து செயற்படுவதற்கும் அழைப்பு விடுத்துள்ளது.**

இதுகுறித்த பிரித்தானிய தமிழர் பேரவை விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானிய தமிழர் பேரவையானது ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவல நிலைக்கு தீர்வு காணும் வகையில், உடனடி மீள்குடியேற்றம் மற்றும் மீள்நிர்மாணப் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று இந்தியாவுடனும், மனிதாபிமான பணிகளுக்கு ஆதரவு தரும் மேற்குலக நாடுகளுடனும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறது.

1983ஆம் ஆண்டு முதல் போரின் காரணமாக இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்ற தமிழ் மக்களின் வாழ்நிலையை மேம்படுத்தவும், போரால் சிதைக்கப்பட்ட தமிழர் தாயகத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் தொடர் நடவடிக்கைகளை எடுதது வருகிறது.

கடந்த காலங்களில், இலங்கையின் அனைத்து அரசுகளும் தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்தை புறக்கணித்ததுடன், அதற்கு பல்வேறு தடைகளையும் ஏற்படுத்திவந்திருந்தன.

போருக்குப் பிந்தைய மிக முக்கியமான பணிகளான மீள் குடியேற்றமும் மீள் நிர்மாணமும் அவசர கால அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

தமிழருக்கு அரசியல் தீர்வு வரும் வரை காத்திருப்பது, மக்களின் நீண்டகாலப் பிரச்சினையைத் தள்ளிப்போடும் பொறுப்பற்ற செயலாகும்.

ஆகவே, இலங்கை, இந்தியா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்களிடம், சிங்கள அரசுகள் தமிழ் மக்களை பலவீனப்படுத்த முயற்சிக்கின்றன


தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் அனைவரையும் பொறுப்பேற்பதாக பாராளுமன்றத்தில் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்த மனிதாபிமானப் பணிகளை அவசரமாகச் செயற்படுத்துவதற்கு, தமிழ் மக்களின் இருப்பு குறித்து உண்மையான அக்கறை கொண்ட அனைத்து தரப்பினருடனும் இணைந்து பணியாற்ற நாம் தயாராக இருக்கின்றோம்.

தமிழ் மக்களின் அரசியல் மற்றும் குடிசார் அமைப்புகள், மீள்குடியேற்றம் மற்றும் மீள் நிர்மாணம் தொடர்பாக இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும் என அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க-8)

# இணங்காவிடின் நீக்கப்படுவீர்கள்

## வெகுஜன ஊடக அமைச்சர்



(கொழும்பு)

அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க முடியாதவர்களை தபால் திணைக்களத்தில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மத்திய அஞ்சல் பரிவர்தனை நிலையத்துக்கும், மற்ற அரசு நிறுவனங்களைப் போலவே கைரேகை இயந்திரங்கள் கட்டாயம் என்று கூறிய அமைச்சர், மேலும் பல கைரேகை இயந்திரங்கள் அங்கு நிறுவப்படும் என்றும் கூறினார்.

ஒவ்வொருவரும் பெறப்பட்ட சம்பளத்திற்கு பொறுப்புக்கூறல் இருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (க-8)

# மீன்களை ஏற்றிச் சென்ற கூலர் வாகனம் விபத்து!

(கொழும்பு)

கிளிநொச்சி முறிகண்டி பகுதியில் மீன்களை ஏற்றிச் சென்ற கூலர் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

A-9 வீதி முறிகண்டியில் சாரதியின் தூக்கம் காரணமாக வேகக்கட்டுப்பாட்டை இழந்த கூலர் வாகனம் வீதியை விட்டு விலகி சென்று விபத்துக்குள்ளானது.

இந் நிலையில் வீதியில் மீன்கள் சிதறிக் காணப்பட்டன. சாரதி காயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலறி அடிக்கும்...

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து அரசியலமைப்பு சர்வாதிகாரத்தை தோற்கடிப்போம் என்ற தொனிப்பொருளில் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டன.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் அரசியல் பழிவாங்கலை மாத்திரம் முன்னிலைப்படுத்திச் செயற்படுகிறது. இன்று ரணிலுக்கு நேர்ந்த கதி நாளை பிறிதொருவருக்கு ஏற்படலாம். ஆகவே ஜனநாயகத்தையும் அரசியலமைப்யையும் பாதுகாக்கவும் சகல தரப்பினரும் கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியதுடன், ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டனர்.

ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கூட்டாக ஒன்றிணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை (24) கொழும்பில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பினை நடத்தினர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் ஆகியோரும்,

பாராளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் முன்னாள் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, ஜி.எல்.பீரிஸ், துமிந்த திசாநாயக்க நிமல் சிறிபால டி சில்வா, டிரான் அலஸ், மகிந்த அமரவீர, பவித்ரா வன்னியராட்சி, அகில விராஜ் காரியவசம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்வதாக அறிவித்திருந்தபோதும் அவ்விருவரும் கலந்துகொள்ளவில்லை. ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் சந்திரிகா வெளியிட்ட அறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அதுகோரல ஊடக சந்திப்பின்போது வாசித்தார்.

ஊடக சந்திப்பை ஆரம்பித்து உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் நான் கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது நாடு தற்போது செல்லும் பயணத்தைப் பார்க்கும்போது நாட்டின் ஜனநாயகம் தொடர்பிலான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. ஜனநாயகம் என்பது இந்த நாட்டில் இரத்தத்துடன் கலந்த விடயமாக உள்ளது.

1948இல் நாடு சுதந்திரமடைந்த நாளில் இருந்து ஜனநாயகம் கட்டம் கட்டமாகப் பலமடைந்தது. இப்போது இந்த ஜனநாயக சமூகத்தில் இருந்த அடையாளங்கள் மெதுவாக அழிவடைந்து போவதை பார்க்கக்கூடியதாக உள்ளது. ஜனநாயகத்தை புதைப்பதற்கான பிணப்பெட்டியின் பலகைகள் தயார்படுத்தப்படுவது போன்றே தெரிகின்றது. ஜனநாயகத்திற்கு பிரச்சினை ஏற்படுகின்றது என்று தெரிகின்றது என்றால் கட்சி பேதங்களை மறந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக ஒன்றிணைய வேண்டும் என்று அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் விடுதலை தொடர்பில் நாங்கள் முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய முன்னாள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ரணில் விக்கிரமசிங்கவின் கைது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

ஜனாதிபதியென்ற வகையில் கிடைத்த அழைப்புக்கமைய நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த நிலையிலேயே அது தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அது தொடர்பான பொலிஸ் விசாரணைகள் முழுமையடையாமல் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக ஏதேனும் கருத்துக்களை வெளியிட்டால் கருத்து வெளியிடுபவர்களை அச்சுறுத்தி மௌனமாக்குவதையே காண்கின்றோம். இதனால் ஜனநாயக நிறுவனங்கள் முழுமையாக இல்லாமல் செய்யப்படுகின்றன. இதனை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம்,

நாட்டில் சட்டத்தின் ஆட்சி அமுல்படுத்தப்பட வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாறுபட்ட கருத்தும் கிடையாது.

ஆனால் நடைமுறையில் சட்டத்தின் ஆட்சி முறையாக செயற்படுத்தப்படுகிறதா என்பதில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது. நீதிமன்றத்தின் தீர்மானத்தை யூரியூபர் முன்னதாகவே அறிவிக்கும் நிலைமை இன்று காணப்படுகிறது. இவ்வாறான போக்கு ஜனநாயக விரோதமானது என்றார்.

ஊடக சந்திப்பில் உரையாற்றிய அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள். அரசாங்கத்தின் சர்வாதிகாரத்துக்கு கட்சி பேதமின்றி அனைவரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதாகவும் குறிப்பிட்டனர். (ந-7)

## அரியாலையில்...

இவ்விடயங்கள் தொடர்பில் சத்தியக்கடதாசி வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர்பில் இவ்விடயங்களை முன்வைக்குமாறு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரியாலையில் பணியாற்றிய சோமரத்ன ராஜபக்ஷ எனும் நான், அப்பகுதிவாழ் மக்களால் "சம்பத்" என்ற பெயரிலேயே அறியப்பட்டேன். அப்பகுதியில் பணியாற்றியவன் என்ற ரீதியில், 1996ஆம் ஆண்டளவில் அரியாலை பிரதேசத்தில் காணாமல் போன சகல நபர்களும் 7ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்தின் உயரதிகாரிகளினாலேயே கைதுசெய்யப்பட்டனர் என்பதை நானறிவேன். அவ்வதிகாரிகள் யார் என்பதையும், 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சகல குற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவதற்கு நான் தயாராக இருப்பதுடன் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு நான் இவ்விடயங்களை வெளிப்படுத்துவதற்கு உதவுமாறும், இவற்றை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் முன்வைக்குமாறும் சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும்,

அண்மையில் கண்டறியப்பட்ட செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப்பணிகளில் சுமார் 150 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் 1996ஆம் ஆண்டளவில் செம்மணி முகாம் - துண்டி முகாம் வரை இடம்பெற்ற கைதுகள், படுகொலைகள் மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மரண தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ செய்திருக்கும் முக்கிய வெளிப்படுத்தல்களின் முதற்பகுதி கடந்த ஞாயிறன்று (17) வலம்புரியில் வெளியானது. அதன் தொடர்ச்சியாக வெளியிடப்படும் இரண்டாம் பகுதி வருமாறு,

1996ஆம் ஆண்டளவில் யாழ். கைதடி பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் (அவர்களது பாதுகாப்புக் கருதி பெயர்கள் வெளியிடப்படவில்லை) செம்மணியில் கைது செய்யப்பட்டு, அன்றைய தினம் இரவு 7ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். இருப்பினும் அவர்கள் இருவரும் கொல்லப்படாத வகையில், செம்மணி சோதனைச்சாவடிக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து அவர்களை விடுவிப்பதற்கு நான் உதவினேன்.

அதேபோன்று அரியாலைப் பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட மற்றுமொரு பெண்ணையும் (பாதுகாப்புக் கருதி பெயர் குறிப்பிடப்படவில்லை) நான் தலையிட்டு விடுவித்தேன். இவ்வாறு என்னால் காப்பாற்றப்பட்டவர்கள் இப்போது எங்கேனும் இருப்பார்களாயின், அவர்கள் முன்வந்து அந்த உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமன்றி அரியாலையைச் சேர்ந்த ஆண் ஒருவர் (பாதுகாப்புக்கருதி பெயர் குறிப்பிடப்படவில்லை) துண்டி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அச்சந்தர்ப்பத்திலும் நான் தலையிட்டு, அவரை விடுவித்தேன் எனத் தெரிவித்துள்ளார். (ந-7)

## ரணிலுக்கு...

பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாக்க, இரண்டு ஜெயிலர்கள் உட்பட எட்டு சிறை அதிகாரிகள் ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை மருத்துவமனையைச் சுற்றி சிறப்பு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ந-7)

## நீதிமன்றில்...

வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், வெலிக்கடைச் சிறையில் அழைக்கப்பட்ட ரணில் சிலமணி நேரங்களிலேயே திடீர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார். இந்நிலையிலேயே குறித்த அறிவிப்பானது விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலைமையைக் கண்காணித்த பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது, "முன்னாள் ஜனாதிபதிக்கு நீர்ச்சத்து குறைபாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அவரது இரத்தத்திலும் உடலிலும் மாற்றங்கள் காணப்படுகின்றன.

இந்நிலை "வெப்பப் பக்கவாதம்" காரணமாகவும் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இந்த நிலைக்குக் காரணம், அன்றைய தினம் அவர் கடுமையான வெப்பத்தில் சுமார் 10 மணி நேரம் நீதிமன்ற அறையில் இருந்திருக்கலாம். அந்த நேரத்தில் அவருக்குச் சரியான தண்ணீர் அல்லது உணவு கிடைக்காமல் போயிருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி தற்போது தீவிர மருத்துவக் கண்காணிப்பில் உள்ளார். அவர் நீர்ச்சத்து குறைபாடு காரணமாக சிகிச்சை பெற்று வருகின்றார். பல சிறப்பு மருத்துவ குழுக்கள் அவரது உடல் நிலையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன.

நீரிழப்பை முறையாக நிர்வகிக்காவிட்டால், அது சிறுநீரகங்கள், மூளை மற்றும் பிற முக்கிய உறுப்புக்களைப் பாதிக்கும் கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தும். இந்த ஆபத்தைத் தவிர்க்க அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும், முன்னாள் ஜனாதிபதி ரணில் சரியான சிகிச்சையைப் பெற்ற பின்னர் இரண்டு அல்லது மூன்று நாட்களில் குணமடைந்து சாதாரண நிலைக்குத் திரும்புவார்" என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா வில் புதிய தீர்மானம்

# இலங்கையின் பழைய சித்தாந்தம்

**(கொழும்பு) ----------------------------------**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றமீறல்களுக்கான பொறுப்புக் கூறலுக்கு இலங்கை அரசு மேலும் கால அவகாசம் கோரவுள்ளதாகத் தெரிய வருகிறது.**

பிரித்தானியா, கனடா, மலாவி, மொண்டினீக்ரோ, மற்றும் வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய குழு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக செப்ரெம்பர் அமர்வில் ஒரு புதிய தீர்மானத்தை முன் வைக்கவுள்ளது. இந்த புதிய தீர்மானம், ஏற்கனவே உள்ள தீர்மானங்களை விட, மென்மையான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் என இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை இந்தத் தீர்மானம் அங்கீகரிக்கும். இருப்பினும், கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலின் முக்கியத்துவத்தை புதிய தீர்மானம் தொடர்ந்து வலியுறுத்தும் என அரச தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

மேலும் இந்த புதிய தீர்மானத்தை நேரடியாக பேச்சுவார்த்தை மூலம் எதிர்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேராத், பன்னாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து, பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசாங்கத்தின் முழுமையான ஈடுபாட்டை உறுதிப்படுத்தவுள்ளார்.

செப்ரெம்பர் 8ஆம் திகதி அமர்வு தொடங்கும் போது, ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் இலங்கை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அவர் இலங்கைக்கு மேற்கொண்ட சமீபத்திய விஜயத்தின் அடிப்படையிலான இந்த அறிக்கை, புதிய பரிந்துரைகளை உள்ளடக்கியிருக்கும். அதன் பின்னர், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேராத், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவிப்பார்.

எவ்வாறாயினும் அரசாங்கம், இந்த புதிய தீர்மானத்தை கடுமையாக எதிர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில், உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் மற்றும் மாகாண சபை தேர்தல்கள் குறித்த தனது உறுதியான வாக்குறுதிகளையும் வலியுறுத்த உள்ளது.

மனித உரிமைகளை பாதுகாப்பதிலும், கடந்தகால விடயங்களில் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதிலும் முழு அளவிலான ஈடுபாட்டுடன் செயற்படுவதற்கு கால அவகாசம் அத்தியாவசியமானது என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் முன்வைக்க உத்தேசித்துள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது. (க-8)

# எமது உரிமைகளை மீட்க நாமே போராடுவோம்!

## கிளிநொச்சியில் கையெழுத்து போராட்டம்




(கண்டாவளை)

எமது உரிமைகளை மீட்க நாமே போராடுவோம் என்ற தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் செம்மணி மனிதப்புதைகுழிகள் மற்றும் ஈழத் தமிழர்களுக்கு எதிரான படுகொலைகளுக்கு நீதி கோரி ஐ.நாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ள கடிதத்துக்கான கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கை நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

தாயகச் செயலணி என்ற அமைப்பின் ஊடாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் செம்மணியில் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்து சேகரிக்கும் போராட்டம் நேற்று கிளிநொச்சி பொதுச்சந்தை மற்றும் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வரை குறித்த கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-35)

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை அதிகாலை 5.21 மணிமுதல் 7.05 மணி வரையான கடக லக்ன சுப முகூர்த்த சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 5 மணி முதல் 5.30 மணிவரையுள்ள முகூர்த்தத்தில் கிரியாரம்பக் கிரியைகள் ஆரம்பமாகி இன்று மற்றும் நாளை ஆகிய இரு தினங்களும் விநாயகர் வழிபாடு, யாக பூசை, விஷேட ஹோமங்கள் என்பன நடைபெற்று பிரசாதமும் வழங்கப்படும். (3)

# சில மருந்துகளுக்கு தட்டுப்பாடே

## ஒத்துக் கொண்டார் சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் தற்போது சில மருந்துகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு விலைமனுக்கோரல் இல்லாததன் விளைவாகவே சில மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு விலைமனுக்கோரல் விடப்பட்டிருந்தால், மருந்துகள் சரியாக வந்திருக்கும். அடுத்த ஆண்டுக்கு விலைமனுக்கோரல் மேற்கொண்டுள்ளோம்.

தற்போதைய மருந்துப் பற்றாக் குறையை சமாளிக்க, பிராந்திய கொள்முதல்களுக்காக வைத்தியசாலைகளுக்கு 3,500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அவ்வப்போது சில நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, மருந்துகளை நன்கொடையாகப் பெறுகிறோம். சில நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந் தங்களில் கையெழுத்திடும் நிலையை அடைந்து விட்டோம். எனவே இந்தப் பிரச்சினையை நாம் இலகுவாக எதிர் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (க-8)


மணிவிழா வாழ்த்துக்கள்




திரு.சின்னத்தம்பி குலேந்திரராஜா

(B.A, PGDE,M.A (History), MEd, Special Trd in Art

ஆசிரிய ஆலோசகர் (வரலாறு)
யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்.

முன்னாள் ஆசிரிய ஆலோசகர்
மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்.

சமூகவிஞ்ஞான பாட இணைப்பாளர் ( LMDM Unit )
மாகாணக் கல்வித் திணைக்களம்,வடக்கு மாகாணம்.

25.08.2025 அன்று ஓய்வு பெறும் தங்களின் ஓய்வு காலம் நோய் நொடி இன்றி மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துகின்றோம்.

(5122)

வாழ்த்துபவர்கள்
சமூகவிஞ்ஞான பாட ஆசிரியர்கள்,
வடக்கு மாகாணம்.


# பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்


(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று திங்கட்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

வைத்தியர்கள் இடமாற்றம் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இன்று காலை 8 மணி முதல் நாடு தழுவிய பணிப்புறக் கணிப்பில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளதாக ஊடக சந்திப்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் திருக்கல்யாண உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வெகு சிறப்பாக இடம்பெற்றது.

# வவுனியாவில் துவிச்சக்கர வண்டிகளுக்கு ஸ்டிக்கர்களை ஒட்டிய பொலிஸார்



(வவுனியா)

வவுனியா நகரில் வாகன போக்குவரத்தினால் விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில் துவிச்சக்கர வண்டிகளுக்கு ஒளியூட்டக்கூடிய ஸ்டிக்கர்களை ஒட்டும் பணியினை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் போக்குவரத்து பொலிஸார் இணைந்து துவிச்சக்கர வண்டிகளுக்கு ஸ்டிக்கர் ஒட்டும் பணியினை முன்னெடுத்திருந்தனர்.

இரவில் துவிச்சக்கர வண்டியில் பயணிக்கும் போது பின்னால் வரும் வாகனத்திற்கு துவிச்சக்கர வண்டியினை சரியாக தெரியத்தக்கதாக ஒளியூட்டப்பட்ட ஸ்டிக்கர் ஒட்டும் வேலைத் திட்டம் வவுனியா குருமன்காட்டுச் சந்தியில் நேற்று முன்தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு மக்கள் மத்தியில் பாரிய வரவேற்பு கிடைத்துள்ளமையுடன் இவ்வாறான ஒளியூட்டக்கூடிய பட்டிகள் மாடுகளின் கழுத்துப் பகுதியில் கட்டும் சமயத்தில் கட்டாக்காலி மாடுகளினால் ஏற்படும் விபத்தினையும் தடுக்க முடியும் என மக்கள் தெரிவித்துள்ளனர். (8)

# சைவபரிபாலன சபை நடத்தும் பரீட்சைக்கான விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களிடையே சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் அகில இலங்கை ரீதியில் தரம் 2 முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு சைவ நெறி மற்றும் தரம் 2 முதல் 8 வரையான மாணவர்களுக்கு தமிழ்மொழிப் பாடங்களுக்கான பரீட்சைகள் சைவபரிபாலன சபையினரால் நடத்தபடுகிறது.

2025 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி பாடசாலைகளில் நடைபெறும்.

மாணவர்களின் செயல் திறமையினை அடிப்படையாகக் கொண்டு சைவ நெறி மற்றும் தமிழ் பாடங்களுக்குரிய சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு தரத்திற்கும் 1 ஆம், 2 ஆம் மற்றும் 3 ஆம் இடங்களுக்கு முறையே 10,000 ரூபாய், 7,000 ரூபாய், 5,000 ரூபாய் வழங்கப்படவுள்ளன. அத்துடன் 12 மாணவர்களுக்கு 3000 ரூபாய் பணப்பரிசில்களும் வழங்கப்படும்.

இப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் பாடசாலைகள் 077 789 5716 அல்லது 021 222 7678 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென தெரிவித்துள்ளனர். (3)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய திவ்ய மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் மஹோற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் செம்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இரதோற்சவமும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சமுத்திர தீர்த்தவாரியில் தீர்த்தோற்சவமும் அன்று இரவு 8 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெற்று மறுநாள் திங்கட்கிழமை இரவு 10 மணிக்கு திருக்கல்யாண உற்சவத்துடன் நிறைவடையவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)

# 'இந்த மண் எங்களின் உரிமை' வவுனியாவில் கவனயீர்ப்பு!



(வவுனியா)

மன்னாரில் இடம்பெறும் கனியமணல் அகழ்வு, காற்றாலைத் திட்டத்திற்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவாக வவுனியாவில் நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா இளைஞர்களின் ஏற்பாட்டில் சுற்றுச்சூழலுக்கான இளைஞர் நடவடிக்கை அமைப்பின் பங்கேற்புடன் "கருநிலம்" என்னும் தொனிப் பொருளில் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் பறை முழுங்கி மக்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் "இந்த மண் எங்களின் உரிமை", "எங்கள் எதிர்காலத்திற்கான வளத்தை அழிக்காதே" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பி இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் பின்னர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து மணிக்கூட்டு கோபுர சந்தி வழியாக கடை வீதியூடாக சென்று கொரவப்பதான வீதியில் சென்று தமது போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்திருந்தனர்.

கவனயீர்ப்பில் வவுனியா மாவட்ட இளைஞர்கள், மன்னார் மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரன், கலைஞர் மாணிக்கம் ஜெகன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 200 | 140 |
| தக்காளி | 180 | 220 | 300 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 250 |
| கோவா | 300 | 250 | 350 | 230 |
| கரட் | 400 | 450 | 500 | 400 |
| பூசணி | 100 | 120 | 80 | 60 |
| புடோல் | 120 | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 230 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 150 | 120 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 300 |
| வெண்டக்காய் | 100 | 100 | 200 | 120 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 |
| பயற்றங்காய் | 400 | 300 | 250 | 400 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 180 |
| பீற்றூட் | 150 | 100 | 250 | 100 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 400 | 180 |
| போஞ்சி | 700 | 600 | 600 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 100 | 150 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 40-120 | 150 | 80 |
| தேசிக்காய் | 300 | 250 | 400 | 300-400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-180 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 450 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 150 | 250 |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 180 | 100 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க வரிவிதிப்பினால் வேலையிழப்புகள் அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க வரி விதிப்பினால், தைக்கப்பட்ட ஆடைத் துறையைச் சேர்ந்த 16 ஆயிரம் பணியாளர்கள் தொழில்களை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு பணி நீக்கங்கள் காரணமாக, நாட்டில் குறைந்த வேதனத்துடனான உழைப்பு உருவாகக்கூடும் என புதிய ஆய்வொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் ஏனைய பல தொழில்துறைகளுக்கான மலிவான கொடுப்பனவுகளை உருவாக்கும் வாய்ப்பு ஏற்படலாம்.

இதேவேளை, பயிற்றப்படாத தொழிலாளர்களால் முன்னெடுக்கப்படும் ஏனைய துறைகளும் பாதிப்படையலாம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, தைக்கப்பட்ட ஆடைத்துறையில் 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணிகளில் அனுபவமற்ற பெண் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# ரணில் விக்கிரமசிங்க கைது எதிர்க்கும் தலைவர்கள்

## சந்திரிக்கா



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடும் கவலை தெரிவித்துள் ளார், இது இலங்கையின் ஜனநாயகத்திற்கு கடுமையான அச்சுறுத்தலாக இருப்பதாக எச்சரித்துள்ளார்.

இந்த நடவடிக்கை நாட்டின் ஜனநாயக விழுமியங்கள் மீதான திட்டமிட்ட தாக்குதலுக்குச் சமம் என்றும், அதன் தாக்கங்கள் ஒரு தனிநபர் அல்லது அரசியல் கட்சியைத் தாண்டி நீண்டுள்ளது என்றும் வலியுறுத்தினார்.

இந்த நடவடிக்கை ஒட்டுமொத்த சமூகத்தின் உரிமைகளுக்கு ஆபத்தை விளைவிப்பதாகவும், அனைத்து அரசியல் தலைவர்களும் இது போன்ற நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (க-8)

## மைத்திரிபால சிறிசேன



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதன் மூலம் இலங்கையின் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்படத் தொடங்கிவிட்டது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டு செய்தியாளர் சந்திப்பைத் தொடங்கி வைத்து கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனநாயக சமூகத்தின் பண்புகள் படிப்படியாக மறைந்து வருகின்றன என அரசியல் கட்சிகள், நிறங்களை மறந்து ஜனநாயகத்தைப் பாதுகாக்க இந்த நேரத்தில் நாம் ஒன்றுபட வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" என அவர் அழைப்பு விடுத்தார். (க-8)

## காங்கிரஸ் எம்.பி தரூர்



"பழிவாங்கும் அரசியலை கைவிட வேண்டும்" என இலங்கை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுக்கு இந்திய காங்கிரஸ் எம்.பி சசி தரூர் கருத்து தெரிவித்துள்ளார். இது குறித்து காங்கிரஸ் எம்.பி சசி தரூர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, மேலோட்டமாகப் பார்த்தால், அற்பமான குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்திருப்பது குறித்து கவலை கொள்கிறேன்.

உடல்நலப் பிரச்சினைகள் காரணமாக அவர் ஏற்கனவே சிறை மருத்துவமனை க்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளார். இது அவர்களின் உள் விவகாரம் என்பதை முழுமையாக மதிக்கும் அதே வேளையில், பழிவாங்கும் அரசியலை இலங்கை அரசு கைவிட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (க-8)

# INVITATION FOR BID 2025 STAGE-III VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI (Kollankaladdy)

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Secretary, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankalady)** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987."**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Bidding document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents.
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **2025.08.25 to 2025.09.08** in between 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankalady) T.P:021 2241130, Fax:021 224 3688) from 09:00 hrs to 15:00 hrs. During the period from 2025.08.25 to 2025.09.08 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankalady) on or before 10.30 a.m at 2025.09.09** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankalady).** commencing at **10.30 AM on 2025.08.29**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | **From 2025-08-25 To 2025-09-08** | | | | | |
| | **Pre-Bid Conference** | | | **2025-08-29 at 10.30 AM** | | | | | |
| | **Closing and Opening of Bids** | | | **2025-09-09 at 10.30 AM** | | | | | |
| **Bid ID** | **Description of Work** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Grade Required** | **Non-Refundable Fee (Rs.)** | **Required Bid Security/ Bank Draft/ Security Deposit** | | **Bid Validity Period** | |
| | | | | | | **Security Amount (Rs.)** | **Validity Period** | | |
| NP/14/41(14)/05/02/ 437/CF-26/2025 | Reconstruction of Appachipillai Concrete Road Stage I at Alaveddy South | 5.70 | 60 | C8 or above (Highway) | 3,000.00 | 57,000.00 | 23/12/2025 | 25/11/2025 | |
| NP/14/41(14)/05/02/ 438/CF-27/2025 | Construction of Kankesanthurai Cemetery Road | 4.22 | 60 | C8 or above (Highway) | 3,000.00 | 43,000.00 | 25/11/2025 | 28/10/2025 | |
| NP/14/41(14)/05/02/ 439/CF-28/2025 | Reconstruction of Kiddangi Road at Tellippalai | 5.73 | 60 | C8 or above (Highway) | 3,000.00 | 58,000.00 | 23/12/2025 | 25/11/2025 | |
| NP/14/41(14)/05/02/ 440/CF-29/2025 | Reconstruction of Chemponvaykal Cemetery Road at Keerimalai | 3.03 | 60 | C9 or above (Highway) | 3,000.00 | 31,000.00 | 25/11/2025 | 28/10/2025 | |
| NP/14/41(14)/05/02/ 441/CF-30/2025 | Construction of Boundry Wall at Kankesanthurai Office | 8.29 | 90 | C8 or above (Building) | 3,000.00 | 83,000.00 | 23/12/2025 | 25/11/2025 | |
| NP/14/41(14)/05/02/ 442/CF-31/2025 | **Pakage - I** 1. Reconstruction of the Hume Pipe Culverts & Retaining Wall at Poothavarayar Temple Road at Myliddy 2. Construction of Boundary Wall at Palaly South Vasavilan Hindu Cemetry 3. Construction of Boundry Wall at Kadduvan Playground | 5.85 | 90 | C8 or above (Highway/ Building) | 3,000.00 | 59,000.00 | 23/12/2025 | 25/11/2025 | |

**Chairman,**
**Divisional Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Kankesanthurai(Kollankaladdy).**
**25.08.2025**

(C-3721)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# போரை நிறுத்தாவிடின் பொருளாதாரத் தடை

## ரஷ்யாவை எச்சரிக்கும் ட்ரம்ப்

**(வோஷிங்டன்)**

**"உக்ரைனுடனான போரை இரண்டு வாரங்களுக்குள் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் இல்லாவிட்டால் ரஷ்யா மீது மிகப் பெரிய பொருளாதார தடைகள் அல்லது வரி விதிக்கப்படும்" என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

உக்ரைன் சர்வதேச இராணுவ அமைப்பான "நேட்டோ"வில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 2022 இல் உக்ரைன் மீது போரைத் தொடுத்தது ரஷ்யா.

மூன்றாண்டுகளைத் தொடர்ந்து வரும் இந்தப் போரில், உக்ரைனுக்காக இதுவரை 5 லட்சம் கோடி ரூபாய்க்கு மேற்பட்ட ஆயுதங்களை அமெரிக்கா வழங்கியுள்ளது.



அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், பொறுப்புக்கு வந்ததில் இருந்து, ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்த தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

சமீபத்தில் இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை, அமெரிக்காவில் சந்தித்து விவாதித்தார். பின், உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களையும் நேரில் அழைத்து பேசினார்.

இதனால் விரைவில் போர் முடிவுக்கு வரும் என கருதப்பட்ட நிலையில், மேற்கு உக்ரைனின் முகாசெவோ பகுதியில் ரஷ்யா மீண்டும் தாக்குதல் நடத்தியது. இதில், அங்கு செயற்பட்டு வந்த அமெரிக்க மின்னணு தொழிற்சாலை பெரிதளவில் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வெள்ளை மாளிகையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில், உக்ரைனில் உள்ள அமெரிக்க தொழிற்சாலை மீதான ரஷ்யாவின் தாக்குதலை நான் ரசிக்கவில்லை. போர் தொடர்பான எந்த விடயத்தையும் நான் விரும்புவதில்லை. ரஷ்யா இரண்டு வாரங்களுக்குள் உக்ரைனுடன் அமைதி ஒப்பந்தம் செய்ய வேண்டும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

விரைவில் முடிவு இல்லையெனில், அவர்களுக்கு பெரிய அளவிலான பொருளாதாரத் தடைகள் அல்லது வரி விதிப்போம். ரஷ்யா இதை பொருட்படுத்தாது என்று சிலர் நினைக்கின்றனர்.

ஆனால் அவர்கள் இதை மிகவும் கவனத்தில் கொள்வர் என்று எதிர்பார்க்கிறேன்.

உக்ரைனின் அமைதிக்காகவும் உலகின் நலனுக்காகவும் இந்த நடவடிக்கையை எடுப்பேன். இந்தப் போரை விரைவாக முடிவுக்கு கொண்டு வருவேன் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார். (க-8)

# பாலம் இடிந்து வீழ்ந்ததில் பன்னிருவர் பரிதாபப் பலி

## சீனாவில் துயரம்



(பீஜிங்)

சீனாவின் கட்டுமான பணியின் போது தொடருந்துப் பாலம் இடிந்து வீழ்ந்ததில் 12 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் குயிங்காய் மாகாணத்தில் மஞ்சள் ஆறு பாய்கிறது. இந்த ஆற்றின் மீது மிகப்பெரிய தொடருந்துப் பாலம் கட்டப்பட்டு வருகிறது.

2 கிலோ மீற்றர் தூரமுள்ள இந்தப் பாலம் கட்டுமானப் பணியில் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென அந்தப் பாலம் இடிந்து விழுந்தது.

இதனால் அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் ஆற்றில் விழுந்தனர். இதுகுறித்து மீட்புப் படையினருக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் அவர்கள் அங்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது அந்த ஆற்றில் இருந்து 12 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

இந்த விபத்தில் மேலும் 4 பேர் மாயமாகி இருப்பதாக கூறப்படுகிறது. எனவே மாயமானவர்களைத் தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (க-8)


## வேப்பங்கொட்டை பொறுக்கச் சென்ற இரட்டைச் சகோதரிகள் மின்னல் தாக்கிப்பலி

(டில்லி)

தமிழகத்தில் வேப்பங்கொட்டை சேகரிக்க சென்ற இரட்டைச் சகோதரிகள் மின்னல் தாக்கி பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தின், ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகே உள்ள வாழவந்தாள்புரம் கிராமத்தைச் சேர்ந்த இரட்டைச் சகோரிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடசாலை விடுமுறை என்பதால், ஊருக்கு வெளியே உள்ள வேப்ப மரத்தடியில் தாயாருடன் வேப்பங்கொட்டை சேகரிக்க சென்றுள்ளனர்.

ராமநாதபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் காலை முதல் வெயில் கொளுத்தி வந்த



நிலையில், மதியம் திடீரென மழை மேகங்கள் சூழ்ந்து இடி, மின்னலுடன் மழை பெய்தது.

அப்போது, மரத்தடியில் நின்ற இரட்டைச் சகோரதரிகள் மீது எதிர்பாராதவிதமாக மின்னல் தாக்கியதில், இருவரும் சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்து பலியாகினர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உயிர்கள் மின்னல் தாக்கி பலியான சம்பவம், உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசாவை உலுக்கும் பஞ்சம்-பட்டினிச்சாவு பரிவு காட்டுமா இஸ்ரேல்!

(வோஷிங்டன்)

**மத்திய கிழக்கு நாடுகளின் வரலாற்றில் என்றுமில்லாத பஞ்சம் காசாவில் ஏற்பட்டுள்ளது. பசியைப் போர் ஆயுதமாகப் பயன்படுத்துவதும் போர்க்குற்ற மீறலே என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் கூறியுள்ளார்.**

காசா நகரம் உட்பட பாலஸ்தீனத்தின் சுமார் 20 சதவீத பகுதிகளில் பஞ்சம் தலை விரித்தாடுவதாக ஐ.நா சுட்டிக் காட்டியுள்ளது.

அங்கு உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு நிலைமையைச் சுமுகப்படுத்தாவிடின் பல்லாயிரக்கணக்கான பட்டினிச் சாவுகள் இடம்பெறும் எனவும் ஐ.நா தெரிவித்திருக்கிறது.

முற்றும் முழுதாக மனிதனால் உருவாக்கப்பட்ட பஞ்சம் கட்டுக்கு மீறிச் செல்கின்றது.

அத்துடன் காசா எல்லைகளை முடக்கி அங்கு வாழும் அப்பாவிகளுக்கு உணவு வழங்கும் மனிதாபிமானச் செயற்பாட்டை இஸ்ரேல் தடுத்தி நிறுத்தியுள்ளது.

இது கண்டிக்கத்தக்கதும் வேதனைக்குரியதுமானது எனத் தெரிவித்துள்ள ஐ.நாவின் அறிக்கையை மறுத்துள்ள இஸ்ரேல், பஞ்சம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது. காசாவில் பஞ்சம் நிலவுவதாகப் பொய் கூறுவதை இஸ்ரேல் ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளாது எனத் தெரிவித்திருக்கிறது.

காசாவில் மனிதாபிமானமற்ற முறையில் இஸ்ரேல் மேற்கொள்ளும் கொடூரத் தாக்குதலுக்கு இரையாகி நாளுக்கு நாள் அப்பாவிப் பொதுமக்கள் இறக்கும் நிலையில் பட்டினிச் சாவுகள் துயரத்தை ஏற்படுத்தியுள்ளமை உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-8)



## வான்பாதுகாப்பு ஏவுகணைகள் வெற்றிகர பரிசோதனை

### அச்சத்தில் அமெரிக்கா

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் முன்னிலையில் 2 புதிய வான் பாதுகாப்பு ஏவுகணைகள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா, தென் கொரியா ஆகிய நாடுகளின் எச்சரிக்கையை மீறி மேற்குறித்த சோதனைகள் நடத்தப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா, தென் கொரியா ஆகிய நாடுகளின் எச்சரிக்கையை மீறி வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் முன்னிலையில் 2 புதிய வான் பாதுகாப்பு ஏவுகணைகள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக அந்நாட்டு அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த ஆயுதங்களுக்கு சிறந்த போர் திறனும், தனித்துவமான



தொழில்நுட்பமும் இருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு வகையான ஆயுதங்களின் தொழில்நுட்ப அம்சங்கள், ட்ரோன்கள் மற்றும் கப்பல் ஏவுகணைகள் உள்ளிட்ட வெவ்வேறு வான் இலக்குகளை அழிப்பதற்கு மிகவும் உகந்தவை என்றும் தெரிய வருகிறது. (க-8)

## எண்ணெய் ஆலையில் வெடிப்பு; கட்டுக்கடங்காமல் கிழம்பும் கரும்புகை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் அமைந்துள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் கடந்த வெள்ளிக்கிழமை திடீரென வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிப்பைத் தொடர்ந்து வெளியேறும் நச்சுப் புகை காரணமாக, அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மூச்சுத்திணறல் மற்றும் சுவாசக் கோளாறுகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நச்சுப் புகை அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளுக்கு வேகமாகப் பரவி வருவதால், மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு அதிகாரிகள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவும், நச்சுப்புகை பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும், ஆலையை அண்மித்துள்ள பிரதான நெடுஞ்சாலை மற்றும் அருகில் உள்ள பாடசாலைகள் உடனடியாக மூடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், நிலைமையைக் கட்டுப்படுத்த தீயணைப்பு மற்றும் அவசர மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (க-8)



## பென்டகனின் உளவுப் பிரிவுத் தலைவர் பதவி நீக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவ தலைமையிடமான பென்டகனின் உளவுப்பிரிவு தலைவரான லெப்டினன்ட் ஜெனரல் ஜெப்ரி க்ரூஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மேலும் 2 மூத்த இராணுவ அதிகாரிகளும் நீக்கப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை அமெரிக்க பாதுகாப்பு துறை செயலாளர் பீட் ஹெக்செத் பிறப்பித்து உள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதலில் ஈரானின் அணுசக்தி நிலையங்கள் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை என்று கடந்த ஜூன் மாதம் அமெரிக்க பாதுகாப்பு உளவு அமைப்பின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்த மதிப்பீடு முற்றிலும் தவறானது என்று வெள்ளை



மாளிகை தெரிவித்திருந்தது. இந்நிலையில்தான் பென்டகனின் உளவுப்பிரிவு தலைவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 700 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

நடப்பு ஆண்டுக்கான கிராமிய அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி, இம்மாத இறுதிக்குள் பிரதேச செயலாளர்களுக்கு விடுவிக்கப்படும் என்று கிராமிய அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

கிராமிய அபிவிருத்தி திட்டங்களுக்காக இதுவரை சுமார் ரூ. 700 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரி நாயக்க தெரிவித்திருந்த நிலையில், நிதியைப் பெற்ற பிரதேச செயலாளர்கள் திட்டங்களை உடனடியாக செயற்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்றும் கூறினார்.

இதேவேளை 100 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள கிராமிய அபிவிருத்தி முயற்சிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும்,

நடந்து வரும் அனைத்து திட்டங்களிலும் நிலையான முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (க-8)

# தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் சட்டம் அவர்கள் மீது பாயும்

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)


ரணில் விக்கிரமசிங்கவை நெருங்க முடியாது, அவர்மீது கை வைக்க முடியாது, அவர் சர்வதேச இராஜதந்திரம் தெரிந்தவர், நரித்தனமானவர், அவரோடு விளையாட முற்பட வேண்டாம் என எதிரணியினர் கூறி வந்தனர்.

இந்நிலையில் அவர்மீது சட்டம் பாய்ந்துள்ளது. இதனால் ராஜபக்சக்கள் ஆட்டம் கண்டுள்ளனர் எனக் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு தீங்கு, இழப்பு ஏற்படுத்தியது ரணிலா, ராஜபக்சவா என்பது எமக்கு முக்கியம் அல்ல. எவராக இருந்தாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டம் தனக்குரிய கடமையை செய்யும்.

மக்களுக்கு சொந்தமான அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும். இந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாக



இருக்கின்றார். தையிட்டி விகாரைப் பிரச்சினையும் தீர்க்கப்படும். வடக்குக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் முதலீடுகள் தொடர்பில் சில அதிகாரிகள் இழுத்தடிப்பு செய்து வருகின்றனர். அவர்கள் பற்றியும் எமக்கு தெரியும். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-8)

# நிலவைத் தாக்கப்போகும் விண்கல்

## பூமிக்கு பேராபத்து- விஞ்ஞானிகள்

(கொழும்பு)

எதிர்வரும் 2032ஆம் ஆண்டு நிலவிலிருந்து நேரடியாக விண்கற்கள் பூமியைத் தாக்கும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்திருக்கின்றனர். 2032 ஆம் ஆண்டு நிலா மற்றும் விண்கல் அறிவியலுக்கு ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என சமீபத்திய வானியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மனித வரலாற்றில் முதன்முறையாக, நிலாவிலிருந்து நேரடியாகப் புவியை நோக்கி விண்கல் மழை பொழிய வாய்ப்புள்ளது.

வழக்கமாக புவியில் நிகழும் விண்கல் மழைகள் சூரியனைச் சுற்றும் வால்மீன்களிலிருந்து வெளியேறும் தூசித்துகள்கள் அல்லது சிறிய பாறைகளால் ஏற்படுகின்றன. ஆனால், இம்முறை இது முற்றிலும் மாறுபட்ட நிகழ்வாக இருக்கும்.

2024 YR 4 என்ற விண்கல் நிலாவுடன் மோதும் வாய்ப்புள்ளது. இதன் காரணமாக நிலாவிலிருந்து வெளியேறும் துகள்கள் புவியை வந்தடையும்.

இந்த நிலாத் துகள்கள் புவியின் வளிமண்டலத்துடன் உராய்வதால் எரிந்து, வானில் பிரகாசமான ஒளிக் கீற்றுகளையும், எரிகற்களையும் உருவாக்கும்.

இது 2032 ஆம் ஆண்டை புவி, நிலா மற்றும் விண்கல் அறிவியலுக்கு மிகவும் சிறப்பான ஆண்டாக மாற்றும்.

குறித்த விண்கல் முதன்முதலில் கடந்த ஆண்டு டிசம்பர் இறுதியில் கண்டறியப்பட்டபோது 2032 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் புவியைத் தாக்கக்கூடும் என்று கருதப்பட்டது.

இது இதுவரை கண்டறியப்பட்ட விண்கற்களில் மிகவும் ஆபத்தானதாகக் கருதப்பட்டது. ஆனால், மேலும் துல்லியமான ஆய்வுகள் மற்றும் விரிவான புவிச் சுற்றுப்பாதை கணக்கீடுகள் மூலம், வானியலாளர்கள் புவி மீதான தாக்கத்தை இப்போதைக்கு நீக்கிவிட்டனர். (க-8)

# இன்று ஒரு தகவல் 432

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## மனம் என்கிற பூதம்!

ஒரு நாள் ஒரு மனிதன் யோகி ஒருத்தரைத் தேடிக் கொண்டு போனான்.

சாமி! நான் உழைத்து உழைத்து மிகவும் களைப்படைந்துவிட்டேன். இருந்தாலும் இன்னும் என்னுடைய வேலைகள் எல்லாம் முடியவில்லை பாக்கியிருக்கின்றது.

எல்லா வேலையையும் செய்து முடிக்கின்ற சக்தி எனக்கு கிடைக்க வேண்டும். அதற்கு நீங்கள் தான் வழி செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அந்த சக்தியை உனக்கு நான் கொடுத்து விடுவேன் இருந்தாலும் அது உனக்குப் பெரிய தொந்தரவாக இருக்குமே!" என்றார் யோகி.

"இருந்தாலும் பரவாயில்லை சாமி. அப்படி என்ன பெரிய தொந்தரவு வந்துடப் போகிறது. நீங்கள் எனக்கு அந்த சக்தியைக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டான் இவன். இவனுடைய தொந்தரவு தாங்க முடியவில்லை.

யோகி பார்த்தார். "கிட்ட வா"- என்றார். வந்தான். இவன் காதோடு காதாக ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தார். அதை அவன் பாராயணம் செய்து முடிச்சதும் ஒரு பெரிய பூதம் அவன் முன்னால் வந்து நின்றது.

"ஐயா...நான் உங்களுக்காக எல்லா வேலையையும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் நாள் முழுவதும் இடைவிடாமல் எனக்கு ஏதாவது வேலை கொடுத்துக்கிட்டே இருக்கணும். அப்படி எனக்கு வேலை எதுவும் இல்லாமே போச்சின்னா... உங்களையே முழுங்கிடுவேன்... அவ்வளவுதான்!" என்றது.

அவன் பார்த்தான். வேற வழி இல்லை.. "சரி என்று" ஒத்துக்கிட்டான்.

"சரி... வேலை குடு" என்றது பூதம்.

"எனக்கு ஒரு பெரிய மாளிகை வேணும்" என்றான்.

அடுத்த விநாடி அவன் கண் முன்னால் ஒரு பெரிய மாளிகை உருவாகிவிட்டது.

"எனக்கு ஒரு பெரிய தோட்டம் வேணும்" என்றார்.

அதுவும் உருவாகிவிட்டது.

"குதிரை வேணும்" என்றான் வந்தது. "யானை வேணும்"- என்றான் வந்தது.

அவன் குடுத்த எல்லா வேலையையும் அடுத்த விநாடியே செய்து முடித்தது பூதம்.

இனிமேல் சொல்றதுக்கு ஒண்ணுமில்லை. இவன் பார்த்தான். நிபந்தனைப் பிரகாரம் பூதம் நெருங்கி வந்தது இவனை முழுங்கறதுக்கு. இவன் எடுத்தான் ஓட்டம்.

ஓடிப்போய் அந்த யோகியின் காலிலேயே போய் விழுந்தான் - "சாமி என்னைக் காப்பத்துங்க" என்று

யோகி பார்த்தார். அவனுக்கு அதுக்கு ஒரு வழியை சொல்லிக் கொடுத்தார் "சரி" என்று கேட்டுக்கிட்டு அவன் மாளிகைக்குப் போனான். பின்னாலே வாயைத் திறந்துகொண்டு பூதமும் போய்க்கொண்டிருக்கிறது.

அங்கே ஒரு பெரிய இரும்புத்தூண் வேணும் எ ன்று பூதத்திடம் கேட்டான். உடனே தூண் வந்தது.

அதை நல்லா மெருகேற்றி வழவழப்பாகஆக்கச் சொன்னான்.

அதே மாதிரி ஆக்கியது. இப்ப அந்தப் பூதத்திடம் இவன் சொன்னான். ... இதோ பாரு! நீ என்ன செய்யணும் என்றால் நான் நிறுத்தச் சொல்ற வரைக்கும் இந்தத் தூணிலே ஏறி இறங்கிக்கிட்டே இரு!"- என்றான்.

பூதம் அப்படியே செய்ய ஆரம்பித்துவிட்டது.

அதுக்கப்புறம் இவன் தேவைப்படும் போது மட்டும் அந்தப் பூதத்தைக் கூப்பிட்டு வேலை வாங்கிக் கொள்வான்.

இது ஒரு கதை. எதுக்கு இந்த கதை என்றால்... மனிதனுடைய மனமும் சக்திவாய்ந்த அவனுடைய சிந்தனையும் இந்தப் பூதத்துக்கு இணையானது. சரியான வேலை கொடுக்க வில்லை என்றால் அது கெட்ட வழிகளில் செல்ல அவனைத் தூண்டி விட்டுவிடும்... அதனாலே மனம் என்கின்ற பூதத்துக்கு வேலை இல்லாத போதெல்லாம் ஈஸ்வர தியானம் என்கின்ற தூணைப் பற்றிக் கொண்டே இருக்கணும் என்கின்றார் சுவாமி சின்மயானந்தா.

ஆனால் நாமெல்லாம் ஏதோ ஒரு தூணைப் பற்றிக் கொண்டே இருக்கிறோம்.

ஒரு குடும்பஸ்தர் ரொம்ப பெருமையாக சொன்னார்:

"நான் எப்பவும் சும்மா இருக்கமாட்டேன் சார். எந்த நேரமும் என் மனைவி முன்னால் நின்று ஏதாவது பேசிக் கொண்டே தான் இருப்பேன்!" என்றார். நிறுத்தவே மாட்டீங்களா?" என்றேன்.

மாட்டேன் என்றார். ஏன் என்று கேட்டேன். நான் நிறுத்தினால் அவள் பேச ஆரம்பித்துவிடுவாளே அதனாலே தான் அப்படி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சிறுதானியங்களின் மருத்துவ முக்கியத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

ஊட்டம் நிறைந்த சிறுதானியங்கள் உடலுக்கு நன்மை தருபவை. ஏழு வகையான சிறுதானியங்களும் தமிழர் பண்பாட்டில் முக்கியத்துவம் பெறுவதுடன் மேற்கத்தேய நாடுகளில் Super Food என்று கருதப்படுகிறது.

அதாவது உடலுக்கு தேவையான அடிப்படை ஊட்டச்சத்துக்களின் தேவையை நிறைவு செய்து, உடலை நோயிலிருந்து பாதுகாக்கவும் நோய் வராமல் தடுக்கவும் செய்கிறது.

**வரகு (Kodo Millet)**

சற்று கசப்பான வரகில் இருக்கும் புரதச் சத்து, தாது உப்பு வகைகள் உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் ஆகியவற்றைக் குறைக்க உதவும்.

**சாமை (Little Millet)**

அதிக நார்ச்சத்து , இரும்புச்சத்து, B விற்றமின்கள் நிறைந்த சாமை பெரும்பாலும் நீரிழிவு நோயாளிகளுக்கு மிக உகந்த சிறுதானியமாகும். மேலும் செரிமானத்திற்கும் இதய ஆரோக்கியத்திற்கும் மொத்தமாக உடல் ஆரோக்கியத்திற்கும் சாமை பெரும் பங்காற்றுகிறது.

**தினை (Foxtail Millet)**

மாச்சத்து நிறைந்திருக்கும் தினையை அரிசிமாவுக்கு பதிலாக தோசை, இட்லி போன்ற உணவு வகைகளில் பயன்படுத்தலாம், அத்துடன் இதில் இருக்கும் நார்ச்சத்து, கொழுப்பை கட்டுப்படுத்தவும் உதவுகிறது. சருமம் அழகாகவும், பிரகாசமாகவும் இருப்பதற்கு தினையிலிருக்கும் ஊட்டச்சத்துக்கள் உதவுகின்றன.

**குதிரைவாலி(Barnyard Millet)**


கலோரிகள் அதிகம் இல்லாத சிறுதானியம் மிகவும் சுவையானது. மேலும் இதிலிருக்கும் கல்சியம், இரும்பு, பொஸ்பரஸ் போன்றன என்புகளின் ஆரோக்கியத்துக்கு உகந்தது. குழந்தைகட்கு சிறந்த ஊட்டச்சத்து நிறைந்த உணவு. கலோரிகள் குறைவாக இருப்பதால் எடை குறைக்க விரும்புவோரும் இதனைப் பயன்படுத்தலாம்.

**கம்பு (Pearl Millet)**

அதிக இரும்புச்சத்து, மகனீசியம், புரதச்சத்து கொண்டுள்ள கம்பு பெரும்பாலும் இரத்தக்குறைபாட்டிற்கு உதவும். அத்துடன் உடல் வெப்பம், சோர்வு, வயிற்றுப்புண், தேவையற்ற கொழுப்பு போன்றவற்றை குறைக்கவும் கம்பு பயன்படுகிறது.

**கேழ்வரகு(Finger Millet)/ குரக்கன்**

சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்களிடையே கேழ்வரகு முக்கியத்துவம் வாய்ந்தது. இதில் அடங்கியுள்ள கல்சியம் அளவு குறிப்பாக என்புகளை வலுவாக்க உதவும்.



**சோளம் (Sorghum Millet)**

சோளம் புற்றுநோய் அபாயங்களை குறைக்க வல்லது. செரிமானத்தை அதிகரிக்கவும் அழற்சி (Inflammation) குறைக்கவும் உதவும் ஒரு சிறுதானியம். சோளத்தில் குளூட்டன் இல்லாததால் குளூட்டன் ஒவ்வாமை உள்ளவர்கள் இதனை உண்ணலாம்.

சிறுதானியங்களின் பொதுவான நன்மைகளாவன, அதிகளவு நார்ச்சத்து இருப்பதால் செரிமான மண்டலத்தை சீராக வைத்திருக்க உதவுகிறது. மற்றும் மலச்சிக்கலைத் தடுக்கிறது.

சிறுதானியங்களில் சர்க்கரை உயர்த்தும் திறன் (Glycemic index) குறைவாக இருப்பதால் இரத்த சர்க்கரை அளவை சீராகப் பராமரிக்க உதவுகிறது. சிறு தானியங்களை உணவில் சேர்த்துக் கொள்வதால் கொழுப்பை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும், இருதய நோய்கள் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கவும் உதவுகிறது.

அத்துடன் அரிசி, கோதுமை போன்ற பிற தானியங்களுடன் ஒப்பிடும் போது சிறு தானியங்களில் புரதச்சத்து, இரும்புச்சத்து, கல்சியம் மற்றும் விற்றமின்கள் அதிகமாக உள்ளன. அதிக நார்ச்சத்து மற்றும் புரதச்சத்து இருப்பதால் பசியை கட்டுப்படுத்தி, உடல் எடையைக் குறைக்க உதவுகிறது. சில வகையான சிறுதானியங்களில் புற்றுநோயைத் தடுக்கும் சத்துக்கள் காணப்படுகின்றது.

நாம் தினமும் சாப்பிடும் அரிசியுடன் ஒப்பிடும் போது மாச்சத்து சிறுதானியங்களில் குறைவாகவே காணப்படும். ஆனால் நார்ச்சத்தும், புரதச்சத்தும் அதிகமாக சிறுதானியங்களில் காணப்படும். நுண் போசணைக் கூறுகளை பொறுத்தமட்டில் விற்றமின்கள், தாது உப்புக்கள் அரிசியை விட சிறுதானியங்களில் அதிகமாகக் காணப்படும்.

அத்துடன் அரிசியில் இல்லாத சில விற்றமின்கள், தாதுக்கள் போன்றவை வெவ்வேறு சிறு தானியங்களில் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

உதாரணமாக அரிசியைவிட கல்சியம் சத்தானது கிட்டத்தட்ட 20-30 மடங்கு அதிகமாக குரக்கனில் கிடைக்கும். இரும்புச் சத்தானது குதிரைவாலி சிறுதானியத்தில் அதிகளவு இருக்கும்.

அடுத்தபடியாக கம்பு சிறுதானியத்தில் அதிகபடியாக இருக்கும். இதைவிட நாகச்சத்து, மகனீசியம், மாங்கனீசு, செலெனியம் போன்ற சத்துக்கள் அரிசியை விட சிறுதானியங்களில் அதிகமாகக் காணப்படும். அத்துடன் பொஸ்பரஸ் சத்தானது அரிசியை விட எல்லா வகையான சிறு தானியங்களிலும் இரண்டு மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது.

ஏழுவகையான சிறுதானியங்களையும் நாளுக்கு ஒன்றாக பயன்படுத்தினால் கூட வாரத்தில் ஏழு நாட்களுக்கும் சிறுதானிய உணவு கிடைக்கக் கூடியதாக இருக்கும். Anti nutritional Factors அரிசியை விட சிறுதானியங்களை ஊற வைத்து பயன்படுத்தும் போது இக்குறைபாட்டை தவிர்த்துக் கொள்ளலாம்.

# இராசிபலன்

25.08.2025,
ஆவணி 09 , திங்கட்கிழமை
துதியை பிற்பகல் 1.05 மணிவரை

உத்தரம் பின்னிரவு 05.01 மணிவரை
சுபநேரம் 12.05- 1.35 ணிவரை
இராகுகாலம் 7.35- 9.05 மணிவரை

சந்திராஷ்டமம்- அவிட்டம்.

வளவன்

**மேஷம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள் தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள்.

**கடகம்** — காரிய வெற்றிக்கு கந்தனை வழிபட வேண்டிய நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்பத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** — சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**மகரம்** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், புதிய முய ற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**ரிஷபம்** — பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**சிம்மம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செய்தொழில் மேன்மையுண்டு, பொது வாழ்வில் கௌரவம் கூடும்.

**கும்பம்** — ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் அகலும், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** — பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** — விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், புதிய அனுபவங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**தனுசு** — தொலைபேசி வழயில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், குடும்பத்தில் ஒற்றுமை கூடும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**மீனம்** — சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

ஒழுக்கமுள்ளவர்கள் இந்த உலகத்திற்கு அணியாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 851





"யோசித்துச் சொல்லு! பூங்குழலி! உபாயம் சரிதான்! அதில் என்ன அபாயம் இருக்குமோ!"

"அமுதா! நீ கவலைப்படாதே! அத்தை சொன்னபடி செய்வதினால் எனக்கு ஓர் அபாயமும் ஏற்படாது. அப்படி ஏற்படுவதாயிருந்தால் என் இடுப்பில் இந்தக் கத்தி இருக்கவே இருக்கிறது!" என்று சொன்னாள் பூங்குழலி.

அத்தையை மறுபடி ஒரு முறை தழுவிக் கொண்டு விட்டுப் பூங்குழலி அவளைப் போலவே சத்தம் செய்யாமல் நடந்து சென்று பல்லக்கில் புகுந்து திரையையும் விட்டுக் கொண்டாள்.

### 22 ஆம் அத்தியாயம்
### அநிருத்தரின் ஏமாற்றம்

முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் சில தினங்களாகத் தலைநகரிலேயே தங்கியிருந்தார். அவரைக் காண்பதற்கு அரசாங்க அதிகாரிகள், சிற்றரசர்கள், சேனைத் தலைவர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள், வர்த்தகக் குழுக்களின் பிரதிநிதிகள், ஆலய நிர்வாகிகள், தென்மொழி வடமொழி வித்வான்கள் முதலியோர் வந்த வண்ணமிருந்தார்கள். ஆதலின் அவருடைய மாளிகையில் என்றும் எப்போதும் ஜனக் கூட்டமாக இருந்தது.

அநிருத்தர் தமக்கெனத் தனியாக காவல் படை வைத்துக் கொள்ளவில்லை. பரிவாரங்களும் மிகக் குறைவாகவே வைத்துக் கொண்டிருந்தார். ஆகையால் பழுவேட்டரையர்களோடு அவருக்குத் தகராறு எழுவதற்குக் காரணம் எதுவும் ஏற்படாமலிருந்தது.

ஆனபோதிலும், சின்னப் பழுவேட்டரையர் முணு முணுத்துக் கொண்டிருந்தார். முதன் மந்திரி தஞ்சை நகரில் தங்க ஆரம்பித்ததிலிருந்து கட்டுக்காவல் குறைந்து போயிருந்தது. முதன்மந்திரியைக் காண வேண்டுமென்ற வியாஜத்தில் கண்டவர்கள் எல்லாம் கோட்டைக்குள் நுழைந்து கொண்டே இருந்தார்கள். சக்கரவர்த்தியின் அரண்மனையை அடுத்து முதல் மந்திரியின் மாளிகை இருந்தபடியால், அரண்மனை வட்டாரத்திலும் ஜனக் கூட்டம் அதிகமாகிக் கொண்டிருந்தது. முதன்மந்திரியின் பெயரைச் சொல்லிக் கொண்டும் அவருடைய இலச்சினையைக் காட்டிக் கொண்டும் அநேகம் பேர் அங்கே வந்து அவரைப் பார்த்த வண்ணமிருந்தார்கள்.

இதையெல்லாம் ஓரளவு கட்டுப்படுத்த வேண்டும் என்று சின்னப் பழுவேட்டரையர் விரும்பினார். ஆனால் நேரில் முதன்மந்திரியிடம் போய்ச் சண்டை பிடிப்பதற்கு வேண்டிய துணிச்சல் அவருக்கு இல்லை. பெரிய பழுவேட்டரையரும் இருந்தால், இருவருமாக யோசித்து ஏதேனும் செய்யலாம். இந்தச் சமயம் பார்த்துப் பெரிய பழுவேட்டரையரும் கடம்பூருக்குப் போய் விட்டதனால், சின்னவரான காலாந்தக கண்டருக்கு ஒரு கை ஒடிந்தது போல் இருந்தது. கோட்டைக்குள் ஜனக் கூட்டத்தைச் சேர்த்துக் கட்டுக் காவலுக்கு ஊறு விளைவிப்பது போதாது என்று, முதன் மந்திரி அநிருத்தர் அடிக்கடி ஏதாவது சின்னப் பழுவேட்டரையரிடம் உதவி கேட்கும் பாவனையில் அவருக்குக் கட்டளை அனுப்பிக் கொண்டிருந்தார்.


சில நாளைக்கு முன்பு கோடிக்கரைக்கு அனுப்புவதற்குச் சில வீரர்கள் வேண்டும் என்று கேட்டார். காலாந்தக கண்டரும் ஆட்களைக் கொடுத்து உதவினார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## திருட்டுப் பட்டம்



(நேற்றைய தொடர்ச்சி)

பயிற்சி முடிந்து வகுப்பறைக்கு வரும் போது மாலை நான்கு மணி ஆகிவிட்டது. அதன் பின்னர பள்ளி நாலரை மணிக்கு முடிந்தவுடன் ராம்பிரசாத் மோகனையும், சாமிநாதனையும் தன்னுடன் கூட வரும்படியும், வழியில் உள்ள ஒரு கடையில் ஏதாவது சாப்பிட்டு விட்டு செல்லலாம் என வற்புறுத்தினான். மோகன் சம்மதித்து விட்டான். சாமிநாதன் என்னை மன்னித்துக்கொள் இன்று அப்பாவும், அம்மாவும் வெளியே செல்கிறார்கள், தம்பி தங்கைகளை நான்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். என்று சொல்லி விடை பெற்று சென்று விட்டான். சரி என்று மோகனும், ராம்பிரசாத்தும் கடைக்கு சென்று விருப்பபட்டதை சாப்பிட்டனர். பின் பணம் எடுப்பதற்காக தனது புத்தகப் பையை திறந்து பணம் வைத்திருக்கும் அறைக்குள் பணம் எடுக்க போனான். ஆனால் பணம் தட்டுப்பட வேயில்லை. திடுக்கிட்டு தன் புத்தகப் பையிலிருந்து அனைத்து புத்தகங்களையும் எடுத்து துழாவிப் பார்த்தான். பணம் தட்டுப்படவேயில்லை.

என்ன செய்வது என்று கையை பிசைந்தான். மோகன் பணம் தொலைந்து விட்டது இப்ப என்ன செய்வது? என்று கேட்டான். மோகன் என் கையிலும் பணமில்லையே என்று விழித்தான்.

பள்ளி சீருடையில் இவர்கள் இருவரும் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதை பார்த்த கடைக்காரர் மெல்ல இவர்களிடம் வந்து என்ன தம்பி பணமில்லையா? என்று கேட்டார். அவரும் இதே பள்ளியில் படித்து வந்தவர்தான். இவர்கள் இருவரும் மெல்ல எழுந்து ஐயா நான் பொலிஸ் அதிகாரியின் பையன், இவனின் அப்பா பெரிய அதிகாரி, நாங்கள் எங் கள் புத்தகப்பையில் பணம் வைத்திருந்தோம்.

அதனால் தான் "தைரியமாக இங்கு சாப்பிட வந்தோம். நீங்கள் அனுமதி கொடுத்தால் வீட்டுக்கு சென்று பணத்தை எடுத்து வந்து தந்து விடுகிறோம் என்றனர். கடைக்காரர். அதனாலென்ன? நாளைக் காலையிலேயே பணம் கொண்டு வந்து கொடுங்கள். உங்கள் புத்தகப்பையை யாரிடமாவது கொடுத்து வைத்தீர்களா என்று கேட்க இருவருக்கும் அப்பொழுதுதான் பார்த்துக்கொள்ளச் சொல்லி சாமிநாதனிடம் புத்தகப்பையை சொன்னது ஞாபகம் வந்தது. சாமிநாதன் மேல் சந்தேகப்படுவதா என்று சிந்தித்தாலும், அவன் அவசரமாக வீடு செல்ல வேண்டும் என்று சொன்னது இவர்கள் மனதை சந்தேகப்பட வைத்தது.

மறு நாள் பள்ளிக்கு வந்தவுடன் ராம் பிரசாத்தும், மோகனும், அவர்கள் வகுப்பாசிரியரை பார்த்து புத்தகங்களை சாமிநாதனிடம் பார்த்துக் கொள்ள நேற்று நடந்ததை தெரிவித்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதும்

சிலப்பதிகாரம் எனும் இலக்கியம் எங்கள் தமிழ் பெற்ற பேறு எனலாம்.

ஆம், இப்பூமியின் கண் எங்ஙனம் வாழ வேண்டும் என்பதை அறத்தின் வழி நின்று எடுத்துரைப்பது சிலப்பதிகாரமாகும்.

கண்ணகி காதையைப் பாடவந்த இளங்கோ வடிகள், அதனூடு மூன்று விடயங்களைக் குறித்துரைத்துள்ளார். அவை

**அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.**

**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்து வர்.**

**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.**

இம்மூன்று உண்மைப் பொருளை எடுத்துக் கூறவே சிலப்பதிகாரத்தைத் தான் செப்ப வந்ததாக இளங்கோவடிகள் தனது முன்னுரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

இங்கு அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதை பாண்டிய மன்னனின் மரணத்தோடு ஒப்புமை செய்கிறார் இளங்கோ.

ஆம், கோவலன் எடுத்து வந்த கண்ணகியின் காற்சிலம்பு தன் அரண்மனையில் காணாமல்போன காற்சிலம்பு எனக் கருதிய பாண்டிய மன்னன்; கோவலனுக்கு மரண தண்டனை விதிக்கின்றான்.

இங்குதான் விளக்கம், விசாரணை, ஆய்வு என எதுவுமில்லாமல் எழுந்தமானமாக கோவலனைக் குற்றவாளியாகக் கருதி அவனுக்கு மரண தண்டனை கொடுக்கப்படுகிறது.

எந்தக் குற்றமும் இழைக்காத கோவலன் கொல்லப்பட்டமை பாண்டியன் செய்த மிகப் பெரும் தவறு.

ஒருவருடைய உயிரைப் பறிப்பதற்கு முன்னதாக, அவரைக் காப்பாற்றக்கூடிய ஏதுக்கள் ஏதும் உண்டா என்று ஆராய்ந்து ஏதும் இல்லை என மன்னன் முடிவு செய்கின்ற போதுதான் மரண தண்டனை எனும் இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும்.

ஆனால் பாண்டிய மன்னன் தனக்கு இருக்கக்கூடிய ஆட்சி அதிகார மமதையில், சிலம்பை வைத்திருந்த கோவலனின் காதை பற்றி எதுவும் அறிய விளையாது, எடுத்த எடுப்பில் **கோவலனைக் கொல்** எனக் கட்டளையிட்டமை அரசியல் பிழையாகிறது.

அதன் காரணமாகவே அறம் கூற்றாகி பாண்டிய மன்னன் உயிர் துறக்கின்றான்.

ஆக, அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பது விதிவிலக்குப் பெற முடியாத உண்மை.

எனினும் அரசியல் செய்கின்றவர்கள் தாம் நினைத்தபடி எதையும் செய்யலாம். செய்விக்க லாம் என மமதை கொள்கின்றனர்.

எனினும் அரசியல் பிழைத்தவர்களை அறம் ஒருபோதும் சும்மா விடமாட்டாது என்பதை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தினூடு உணர்த்தி நிற்கிறார்.

அவர் கூறிய அந்த உண்மைக்கு இலங்கை அரசியல் தக்க சான்றாக அமைகிறது.

ஆம், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யார் நினைத்தது ரணிலுக்கு இப்படியொரு கதி வரும் என்று.

**இங்குதான் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் எனக் கூறும் சிலப்பதிகாரத்தை மீள் வாசிப்புக்கு உட்படுத்த வேண்டியுள்ளது.**

## மரணதண்டனைக் கைதி சோமரட்ணவை காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள் சந்திப்பு

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மேல் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை கடந்த வாரம் சிறைச்சாலையில் சந்தித்த காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் பிரதிநிதிகள், அவர் வெளிப்படுத்தவிருப்பதாக அறிவித்த விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்துள்ளனர்.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மேல் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல்சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை மற்றும் செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்துத் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இவ்விவகாரம் தொடர்பில் மீண்டுமொரு சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவியான எஸ்.சி.விஜேவிக்ரம கடந்த ஜூலை மாதம் 10 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

7 ஆம் இராணுவக் காலாட்படை தலைமையகத்தில் கொல்லப்பட்டு, செம்மணி சோதனைச் சாவடிக்குக்கொண்டு வரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தாரின் சடலங்களைக் கப்டன் லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைவாகப் புதைத்ததைத் தவிர வேறெந்தக் குற்றத்தையும் தனது கணவர் புரியவில்லை எனவும், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தனது கணவர் தயாராக இருப்பதாகவும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

இக்கடிதம் பற்றிய செய்தி வெளியானதை அடுத்து, சோமரத்ன ராஜபக்ஷவை தாம் சந்தித்து மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத் திருப்பதாக காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை சோமரத்ன ராஜபக்ஷவை சிறைச்சாலையில் சந்தித்த காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் அதிகாரிகள் மூவர், அவரிடம் விடயங்களைக் கேட்டறிந்தனர்.

இதன்போது கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தாரின் படுகொலை1996 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் "தலையாட்டிகள்" மூலம் நபர்கள் அடையாளங்காணப்பட்டு கைதுசெய்யப்பட்டமை என்பன உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் சுமார் ஒருமணி நேரத்துக்கும் மேல் அவர் விபரித்தார்.

சோமரத்ன ராஜபக்ஷவிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு முன்னெடுக்கவிருக்கும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் வெகுவிரைவில் தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-7)

## இன அழிப்புக்கு சர்வதேச விசாரணை கிளிநொச்சியில் நிறைவேறிய தீர்மானம்

இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணை நீதியைப் பெற்றுத்தராது எனவே சர்வதேச விசாரணை பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான சமத்துவக் கட்சி பிரதேச சபை உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரணை கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இனமான தமிழ் இனம் மீது இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் 2009 வரை மேற்கொண்ட தாக்குதல்கள் ஓர் இனவழிப்பு நடவடிக்கையே அதன் உச்சக்கட்டமாக 2009 இறுதி யுத்தகாலத்தில் மிக கொடூரமான இனவழிப்பு யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள்.

அத்தோடு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள், தமிழ் மக்களின் பூர்வீகப் பிரதேசங்களான வடக்கு கிழக்கில் பல இடங்களில் பாரிய மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன. அதன் ஒரு பெரும் சாட்சியாக செம்மணி மனிதப் புதைக்குழி உள்ளது.

எனவேதான் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணைகள் நீதியை பெற்றுதராது ஆகவே சர்வதேச சமூகம் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை என்பன ஒரு சர்வதேச விசாரணை பொறிமுறையை உருவாக்கி தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும் என்றுள்ளது. (ந-7)

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடப்பாண்டில் 47 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் அரங்கேறி வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருந்து இதுவரையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 47 பேர் உயிரிழந்துள்ளதுடன்,

50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு புறநகர்ப் பகுதியான புலத்சிங்கள மாவத்தையில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 21 வயதுடைய ஒருவரே உயிரிழந்ததாகவும் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் நடத்திய குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தில் மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-7)

## பேருந்து நிலையத்திலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

(பல்லேகலை)

பல்லேகலை - குண்டசாலை புதிய நகர பேருந்து நிலையத்திலிருந்து அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த பேருந்து நிலையத்தில் சடலம் ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டெடுத்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவருக்கு 70 வயது என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் உயிரிழந்தவர் இதுவரையில் அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் கண்டி தேசிய வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பல்லேகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 45

சொக்கன்

இந்த சுகத்துக்குப் பழகிவிட்டபிறகு உளவுத்துறை அதிகாரிகளால் அதிலிருந்து விடுபடவே முடியாது.

இதனால் எதிரி நாடுகளில் மட்டும் உளவு நெட்வொர்க் என்கிற பழக்கம் மாறி உலகம் முழுக்கத் தங்களுடைய ஏஜென்ட்களை அள்ளி இறைக்கத் தொடங்குவார்கள். நட்பு நாடுகள் நடுநிலை தேசங்கள் அவ்வளவு ஏன் உள்நாட்டில் இருக்கம் அரசியல் தலைவர்கள் ஆட்சியாளர்களைக்கூட ரகசியமாக வேவு பார்க்கத் தொடங்கி விடுவாார்கள்.

மொசாட்டுக்கும் இதே பிரச்சினைதான். அவர்களுடைய உளவாளிகள் அடுத்தடுத்து பல வெற்றிகரமான ஆப்ரேஷன்களை நடத்தி முடிக்க இஸ்ரேல் அரசாங்க வட்டாரங்களில் மொசாட்டுக்குப் பெரிய மரியாதை கூடுதல் அதிகாரங்கள் குவிந்தன. எங்களை மிஞ்ச யாரும் இல்லை என்று கொலரைத் தூக்கிவிட்டு கொண்ட இஸ்ரேல் உளவாளிகள் அதிகாரிகள் இது தேவையா இல்லையா என்றெல்லாம் யோசிக்காமல் எதுக்கும் இருக்கட்டுமே என்று எக்ஸ்ட்ரா தன்னம்பிக்கையுடன் பல வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

உதாரணமாக இஸ்ரேல் உருவாக்கப்பட்ட நாள் தொடங்கி அவர்களுக்கு ஆதரவாகமட்டுமே இயங்கிவருகிற நாடு அமெரிக்கா மொசாடின் வளர்ச்சியிலும் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ.வுக்கு முக்கியப் பங்கு உண்டு.


ஆனால் இத்தனைக்குப்பிறகும் இஸ்ரேல் அமெரிக்காவை முழுசாக நம்பவில்லை. பெரியண்ணனின் கருணைக்குப் பின்னால் வேறு ஏதாவது உள்நோக் கம் இருக்குமோ என்று சந்தேகப்பட்டார்கள்.

இதனால் ஒரு பக்கம் அமெரிக்காவின் உதவிகளைப் பெற்றுக் கொண்டு இன்னொரு பக்கம் அங்கே தனது உளவாளிகளையும் நிரப்பி வைத்தது மொசாட். அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகளில் தொடங்கி அரசியல் செயற்பாடுகள் அறிவியல் ஆராய்ச்சிகள் அரசாங்க முடிவுகள் மக்களின் மனோநிலை என்று சகலத்தையும் அலசி ஆராயத் தொடங்கினார்கள்.

இந்த விடயம் அமெரிக்காவுக்குத் தெரிந்தபோது செம கடுப்பாவிட்டார்கள். மொசாட்டை ரகசியமாக அழைத்து தம்பி வரம் கொடுத்தவன் தலையிலே கை வைக்கிற வேலை வேணாம். புரியுதா? என்று அதட்டினார்கள்.

மொசாட் ஒன்றும் தெரியாத அப்பாவி போல் முகத்தை வைத்துக்கொண்டது. நானா? அமெரிக்காவை உளவு பார்க்கிறேனா? இல்லையே! அவர்கள் சொல்வது சுத்தப் பொய் என்று அமெரிக்காவுக்கு நன்றாகத் தெரியும் ஆனால் அவர்களால் என்ன செய்யமுடியும்? பங்காளி தோளை மிஞ்சி வளர்ந்து விட்டான். அனுசரித்துக்கொண்டு போக வேண்டியதுதான்!

கடந்த இருபது ஆண்டுகளில் அமெரிக்காவின் ரகசியங்களைத் திருடிய உளவாளிகள் பலர் பிடிபட்டிருக்கிறார்கள். இவர்களில் யாரெல்லாம் மொசாட்டின் ஆட்கள் என்று உறுதி செய்வது ரொம்பச் சிரமம் ஒருவேளை அவர்கள் இதை ஆதாரத்துடன் நிரூபித்தால் கூட எங்களுக்குத் தெரியாம யாரோ ஒரு ஆஃபீஸர் உணர்ச்சிவசப்பட்டுட்டார் ரொம்ப ஸாரி என்று மொசாட் கையை விரித்து விடும்.




மொசாட் நெட்வொர்க் அமெரிக்காவில் எந்த அளவு வலுவாகப் பரவியிருந்தது என்பதற்கு ஓர் உதாரணம் பில் கிளின்டன் மோனிகா லெவின்ஸ்கி விவகாரம்!

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனுக்கும் வெள்ளை மாளிகை ஊழியர் மோனிகாவுக்கும் இடையே நிகழ்ந்த கசமுசாக்கள் இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டன. செய்திகள் கட்டுரைகளில் ஆரம்பித்து ஸ்டார் ரிப்போர்ட் புத்தகம் வரை ஊர்முழுக்க நாறி விட்டது.

ஆனால் இந்த விடயத்தை அமெரிக்க ஊடகங்கள் மோப்பம் பிடிப்பதற்குமுன்பாகவே அங்கிருந்த மொசாட் உளவாளிகள் சிலர் கிளின்டனின் லீலைகளைப்பற்றித் தெரிந்து கொண்டார்கள். உடனடியாக இஸ்ரலுக்குச் செய்தி அனுப்பிவைத்தார்கள்.

பில் கிளின்டன் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்றால் அது அவருடைய சொந்த விவகாரம் இஸ்ரேலுக்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது.

ஆனால் மொசாட் அப்படி நினைக்கவில்லை. எதற்காகவோ இந்த விடயத்தை மேலும் கிளற வேண்டும் என்று தீர்மானித்தார்கள். கிளின்டன் மோனிகா இருவரையும் நோட்டம் விட ஆரம்பித்தார்கள்.

ஒரே பிரச்சினை கிளின்டன் வசிக்கும் அமெரிக்க வெள்ளை மாளிகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஜாஸ்தி அங்கிருந்து வெளியே போகிற தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக் கேட்பது மிகவும் சிரமம்.

அதனால் என்ன? மோனிகா லெவின்ஸ்கி வெள்ளை மாளிகைக்கு வெளியில் தானே இருக்கிறார்? அவர் வீட்டு டெலிஃபோனைக் கொக்கி போட்டால் ஆச்சு!

மொசாட் தொழில்நுட்ப கில்லிகள் சுறுசுறுப்பாக வேலையில் இறங்கினார்கள். சில நாட்களுக்குள் மோனிகாவின் தொலைபேசி அவர்களுடைய கட்டுப்பாட்டில் வந்துவிட்டது.

அப்புறமென்ன? ப்ளேபாய் கிளின்டனின் காதல் மொழிகள் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டன. மொசாட் அதிகாரிகள் இந்தக் கிளுகிளுப்பான பதிவுகளைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்தார்கள்.

அமெரிக்க அதிபரின் குடுமி இப்போது இஸ்ரேல் கையில். அவர்கள் நினைத்தால் பில் கிளின்டனை பிளாக்மெயில் செய்து என்ன வேண்டுமானாலும் சாதித்துக்கொள்ளலாம்.

உண்மையில் மொசாட் அப்படி எதுவும் செய்யவில்லை என்பது வேறு விடயம் ஆனால் அமெரிக்காவில் என்ன நடந்தாலும் அதை உடனுக்குடன் தெரிந்துகொள்கிற அளவுக்கு அவர்களுடைய உளவு தொழில்நுட்ப பலம் அதிகரித்திருந்தது. அல்காய்தாவின் 9/11 தாக்குதல்களைப்பற்றிக்கூட மொசாட்டுக்கு முன்கூட்டியே தெரிந்திருக்கக் கூடும் என்கிறார்கள்.

ஆனால் இப்படி அதீத தன்னம்பிக்கையோடு செயற்படுவதாலேயே மொசாட் ஏஜென்ட்கள் பல பெரிய தவறுகளையும் செய்திருக்கிறார்கள். இந்த விடயத்தில் மொசாட்டுக்கே அல்வா கொடுத்த தில்லாலங்கடி பார்ட்டிகளும் நிறையப் பேர் உண்டு!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திரு. சண்முகம் சதீஸ்குமார்


(சீதா ஜ்வல்லறி உரிமையாளர்)

No.1, நவீனசந்தை, சாவகச்சேரி.

மண்ணில் 1974.11.25

விண்ணில் 2021.08.25

நான்காண்டாகியதோ எம் ஒளிவிளக்கே
கண்மூடித் திறப்பதற்குள்
ஆண்டுகள் நான்கு கடந்து போச்சு
மண்மீதில் நீங்களில்லா நாழிகைகள்
துயரமாச்சு
கண்போல எம்மை காத்து நின்ற
ஆளுமைப் பேரொளியே
பண்படுத்தி எங்களை பாரினில்
நிமிரச் செய்த தெய்வமே
வெண்மை மனம்கொண்ட
வெற்றிவேல் என்னும் பெறுமதியே
உண்மை மனங்களில்
உயர்வாய் நிமிர்கின்ற முழுமதியே
எப்போதும் போல எங்களை வழிநடத்துங்கள்
ஒப்பேதுமில்லா பெருந்தவமே.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!




தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(1488)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவுதினம்



கடந்த 27.07.2025 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர் விநாயகசுந்தரம் கணேசலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 26.08.2025 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி காலை 6.00 மணியளவில் ஊறணி, வல்வெட்டித்துறை தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.** (5140)

நடராசா வீதி,
வல்வெட்டித்துறை.

076 118 7484

இங்ஙனம் :
குடும்பத்தினர்


## ஹெரோயினுடன்...

தேகநபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

விசாரணைகளின் பின்னர் அவர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ரு-7,104)

## ரணிலுக்காக...

கொழும்பில் நேற்று (24) நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு குறிப்பிட் அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது,

அரச நிதி மோசடி குற்றச்சாட்டின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். நீதிமன்றத்தில் இருதரப்பிலும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணையளிப்பதற்கு போதுமான காரணிகள் இல்லாததால் அவரது பிணை கோரிக்கை நிராகரிக்கப்பட்டு நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இப்போது நீதிமன்றம் குறித்து மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுபவர்கள், ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை கிடைத்திருந்தால் நீதிமன்றத்தை புகழ்வார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்தவுடன் தேர்தல் காலத்தில் முட்டிமோதிக் கொண்டவர்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்களில் 99 சதவீதமானோர் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். தமது குற்றங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அச்சத்தில் தான் இவர்கள் முன்னெச்சரிக்கையாக ஒன்றிணைந்துள்ளார்கள். இவர்களின் கூட்டிணைவு எமக்கு சவாலல்ல, ரணிலை சிறைக்கு அனுப்பினால் தான் உறக்கம் வரும் என்று கடந்த காலங்களில் தேர்தல் மேடைகளில் குரல் எழுப்பியவர்கள் தான் இன்று அவருக்காக ஒன்றிணைந்துள்ளார்கள். நாட்டு மக்கள் முதலில் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சிறு குற்றங்களுக்கு தண்டபணம் செலுத்த முடியாமல் எத்தனை பேர் இன்றும் சிறையில் உள்ளார்கள். அதிகாரத்தில் இருந்தவர்கள் செய்யும் தவறுகளை பெரிதுப்படுத்த கூடாது என்று முன்னாள் ஜனாதிபதி ஒருவர் குறிப்பிடுகிறார். அவ்வாறாயின் அவரது ஆட்சியில் எவ்வாறு சட்டவாட்சி செயற்படுத்தப்பட்டிருக்கும் என்பதை மக்கள் ஆராய வேண்டும்.

அதிகாரத்தில் இருந்தவர்கள் மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றால் சட்டத்தின் மீது மக்களுக்கு எவ்வாறு நம்பிக்கை ஏற்படும். எவ்வாறு சட்டவாட்சியை உறுதிப்படுத்துவது. ரணிலுக்கு ஆதரவு தெரிவித்து இன்று(25) கொழும்புக்கு ஒரு தரப்பினர் வருவதாக குறிப்பிடப் படுகிறது. பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்துக்கு அனைவருக்கும் உரிமையுண்டு. நீதிமன்றத்தின் உத்தரவை சவாலுக்குட்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டால் அது நீதிமன்ற அவமதிப்பாகும் என்றார். (ரு-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (5126)

076 825 7716 (ஆகாஸ்)



# Principal Sabalingam Trophy

## T - 20 Third Encounter - 2025

**Jaffna Central College** VS **Jaffna Hindu College**

Time - 10.00 A.M Date - 25.08.2025
Venue - Jaffna Central College

Sponsored By:
Sabalingam Jeyalingam Family

(5079)





## மணப்பெண் தேவை

1. பருத்தித்துறை - சாவகச்சேரி, 1987, பூசம், Bsc Civil Engineering PGD - Structural Engineering, New zaland மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 27858
2. உரும்பிராய், 1986, ஆயிலியம், Business Administration, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 53487
3. காரைநகர், 1988, பரணி, Masters Degree IT, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 46660
4. சங்கானை - கோண்டாவில், 1987, ரேவதி, Msc in Engineering, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 43866
5. வட்டுக்கோட்டை, 1988, பூசம், Accounting Fiance (IASW), C.P.A Full Member Ship, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 45522
6. கரவெட்டி, 1991, பூராடம், Electrical Engineering (UK), Uk Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 35946
7. வடமராட்சி - சாவகச்சேரி, 1989, உத்திராடம், Engineering (Law)UK- UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.52850
8. குப்பிளான்- கொக்குவில், 1990, கேட்டை, MPH MHA and MBA, Phd Reading, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 46762
9. நயினாதீவு - மல்லாகம், 1991, சதயம், Bachelors in Hospitality and tourism and graduate, new zealand citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 28920
10. நெல்லியடி, 1991, பூராடம், HND (jaffna university), USA citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. 47452

நீங்களே www.thaalee.comஇல் பார்த்து உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

(5138)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728



## 2025 A/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

பொருளியல் — ஆசிரியர் M.லிஜிதன்

காலம் : 27.08.2025(புதன்கிழமை)
(மாலை 2.30 முதல் 6.00 மணி வரை)

குறிப்புகள் :

- ஆர்வமுள்ள வெளிமாணவர்கள் கலந்துகொள்ள முடியும்.
- ஒவ்வொரு பாட அலகிலும் தனித்தனியாக மீட்டல் செய்யப்படும்
- பகுதி – 2 வினாக்கள் ஒவ்வொரு பாட அலகுக்கும் 2 வினாக்கள் வீதம் கலந்துரையாடப்படும் (40 புள்ளிகள்)
- 650 + MCQ வினாக்கள் செய்துவிடப்படும்.
- எதிர்பார்க்கைப் பகுதிகள் கலந்துரையாடப்படும்.
- நடைமுறைப் புள்ளி விபரப் பகுப்பாய்வுத் தகவல்கள் வழங்கப்படும்.

(5139)

### தீபம் உயர் கல்விக் கல்லூரி

(டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.)

077 224 7781 நிர்வாகம்



## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

UK - 1320/= | Australia - 2220/=
France - 2080/= | Canada - 2570/=
Germany - 1920/= | மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்

321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி (1475)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3731)



## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3731)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 181, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.